# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுஙு] யாழ்ப்பாணம்:- கர வருடம் மாசி மீ கஎ உ வெள்ளிக்கிழமை (29 பிப்ரவரி 1952) [இல - அஅ]


## பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே!

திருச்சிற்றம்பலம்

கண்ணாய் ஏழுலகும் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நினையல்லா லினியாரை நினைக்கேனே

திருச்சிற்றம்பலம்

## சூரியகிரகணம்

கார்டாமிலே (எகிப்து) 25-2-52 ல் பூரண சூரிய கிரகண மிருந்ததாக ஆங்குள்ள வானசாஸ்திரிகள் கூறுகின்றனர்.

இந்தியாவின் வடபகுதி மத்திய பகுதிகளில் இரண்டு மணித்தியாலங்களுக்குப் பூரணசூரிய கிரகணமிருந்ததாகவும் தென் இந்தியாவில்நெல்லூர் முதலிய இடங்களுக்குக் கீழே இது தெரியவில்லையெனவும் அறிய வருகிறது.

புதைபொருட் பொன்மொழி

## ஸ்ரீ நாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலை

### தருமபரிபாலனத்தின் குறிப்பு

இவ் வித்தியாசாலையை, இது ஆரம்பமானகாலமுதல் பிரமாதி வரு (1879) மார்கழி மீ வரையும் இவர் தாமே நடத்திவந்தனர். அதன் பின்னர் சென்ற சாதாரண வரு (1910) வரையும் ஸ்ரீமத், க. சதாசிவப்பிள்ளையவர்கள் சென்னப்பட்டினத்தில் இருந்துகொண்டு தமது தத்துவகாரர் மூலமாக நடத்தி வந்தார்கள். அதன் பின் இதனை நடத்துமதிகாரம் என்னிடம்பொருந்தது. இதனை நடத்துதற்கு நான் ஒரு சிறிதும் தகுந்தவனல்லனென்று நான் சொல்லுவனேயானால் அது என்னை ஒருவாறு மகிமைப்படுத்துவதற்காகச் சொல்லுகிறேனென்று நினைப்பீர்களென்றெண்ணி அந்த இழிவை இங்கே நான் சொல்லவில்லை. சதாசிவப்பிள்ளையுடைய தத்துவகாரனாக இருக்குறைய 16 வருடகாலமும் சுவாதீனமாக $2\frac{1}{2}$ வருட காலமும் நான் நடத்தியிருக்கிறேன். இவ்வளவுகாலமும் எல்லா விஷயங்களையும் இதன் தாபகருடைய மாணாக்கர்களோடும் வித்தியாசாலை உபாத்தியாயர்களோடும் ஸ்ரீ ஆ. மு. முதலிய பிறரோடும் ஆலோசித்து செய்துவந்தேன்.

இவ்வித்தியாசாலையில் உயர்தரக் கல்வி கற்பிக்க வேண்டுமென்னுமொரு கருத்து இதன் தாபகருக்கு இருந்ததை நன்றாக அறிந்தயான உயர்தர வகுப்பொன்று ஏற்படுத்தி விபவ வரு நடத்திவந்தேன். அரசினர் இதனை Classical School எனப் பதிவு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களது யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாசாலை தருமபரிபாலகர் ஸ்ரீமத். த. கயிலாசபிள்ளையவர்கள் 1913-ம் வரு ஆனிமீ 24உ எழுதி வெளியிட்ட கட்டுரை.

செய்து வருடந்தோறும் பரிசளிப்பித்து ரூபா 500-00 தந்து வந்தனர். இதில் Harward துரை D. P. I. யும் Van Cuylenberg துரையும் செய்த உதவிகள் மறக்கப்படுவனவல்ல. இதில் சில பிராமணப்பிள்ளைகளும் சைவப்பிள்ளைகளும் தமிழும் சமஸ்கிருதமும் கற்றுத் தேறிவந்தனர். இப்பொழுது இவ் வித்தியாசாலையிற் கற்பிக்கும் உபாத்தியாயருள் மூவர் இவ்வித்தியாசாலையிற் கற்றவர்கள்.

தமிழ் பரீக்ஷைக்கு ஒரு துர்ப்பாக்கியம் வந்திருப்பது பலருக்குந் தெரியும். அதனால், காவியபாடசாலை எனப்படும் Classical School ல் பிள்ளைகள் தொகை குறைவாகக் குன்றுவதாயிற்று. அக்குறைவு இதுகுமாத்திரமன்று மதுரை யிலுமிருக்கிறது. பிள்ளைகள் தொகை குறைந்ததைக் கண்டு, சென்ற வருடத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழபிமானிகளை இங்கே கூட்டி அதனை அறிவித்தேன். அவர்களும் மனம் வருந்தி, சில உபாயங்கள் செய்து பார்க்கும்படி சொல்லிப் போயினர்கள். அவற்றைச் செய்தும் அனுகூலமில்லை. அதுகண்டு பிள்ளைகள் தொகை குறைவாயிருக்கிறபடியால் போதிய தொகை சேருமளவும் Grant தர வேண்டியதில்லை யென்று அரசினருக்கு எழுதிவிட்டேன். இதிற் கற்ற பிள்ளைகள் இவருடைய போசனச் செலவுக்காக மாசந்தோறும்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

அரசியல் அலை

## காங்கேசன் துறையில் இருக்கிறது மின்சாரம்

### ஆனால் கமக்காரர் நீர்ப்பாச்சுவது பழைய முறையில்

### வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்தேடும் விந்தை

எங்கே பார்த்தாலும் ஊற்று. ஆனால் பருகுவதற்கொருதுளி நீருமில்லை என்று ஆங்கிலப் பழமொழி சொல்வதுபோலக் காங்கேசன்துறையில் விரும்பியபடி மின்சாரசக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் கமக்காரருக்கு மட்டும் உபயோகத்துக்கில்லை.

கிராமச் சங்கத்தைக் கேட்டால் அது மின்சாரப்பகுதியாரை ஆலோசிக்க வேண்டுமென்கிறார்கள். கிராமச்சங்கத்திற் போதிய வருவாயில்லை என்கிறார்கள்.

கமக்காரரையும் கமங்களையும் வானம் வரையும் உயர்த்திவைத்தொழிய உயிர் தரிபோம்! என்று ஆசைவார்த்தைகள் கூறும் அரசாங்கம் கமக்காரர்களுக்குத் தேவையான நீர்ப்பாய்ச்சலை நுணுக்கமான முறையில் செலவின்றி, அலைதலில்லாமற் செய்ய மின்சார சக்தியை உபயோகப்படுத்துவதற்கு அவரைக் கேட்கவேண்டும், இவரைக் கேட்கவேண்டும் என்று சொல்வது நகைப்புக்கிடமாயிருக்கின்றது.

சலுக்கவழியக் தேவையான மின்சார வசதிகளைச் செய்து வைக்கக் கிராமச சங்கத்தின வருவாய் என்ன, வருத்தம் என்ன, என்று கேட்பது அரசாங்கத்தின் மனநிலையைக் காட்டுகின்றது.

... ... .... ....

சறுக்கிவது சாட்டு!

மத்திய அரசாங்கம் வலிகாமம் வடக்கிலுள்ள கிராமச்சங்கங்களுக்குப் பண உதவிசெய்து அப்பணத்தைப் பின்னர் சமப்பிக்கக்கூடியதாயிருக்கு, தொண்டிச் சாட்டுக்கலசொல்லி மின்சார உபயோகத்தைத் தடைசெய்வது முறையாகுமா?

கோடிக் கணக்கான பொருளைக் கொழும்புத் திட்டக் கோலாசலக் காட்சிக்காகக் கொட்டிவிடும் அரசாங்கம் வடபகுதியிலுள்ள கமக்காரர்கள் மாரி மழையின்றி வளங்குன்றியிருக்கின்றார்கள் எனபதை உணர்ந்தும் நீர்ப்பாய்ச்

## மறவன்புலோ சைவமகாசபைப் பொதுக் கூட்டம்

22-2-52 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஷெ பொதுக் கூட்டம் மறவன்புலோ சிதம்பரசித்தி விநாயகர் ஆலயத்தில் தலைவர் திரு ச. கந்தையா அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. தலைவர் அவர்கள் தமது முன்னுரையில் சைவசமய வளர்ச்சி ஆலயத் திருப்பணிகள் முதலானவற்றில் சபை கூடிய ஊக்கமெடுக்க வேண்டுமென வேண்டிக்கொண்டார்.

ஷெ ஆலயத்தில் 23-2-52 ல் நடைபெறும் சிவராத்திரிக்கு ஸ்ரீ புண்ணியகாச்சி தருமத்திற்குச் சைவபரிபாலன சபையாரால் உதவப்பட்ட நாலுபுசல் நெல்லுடன் ஏற்படும் மிகுதிச் செலவுகளை இச்சபை ஏற்று மாலை 5 மணிக்கு விசேஷ அபிஷேகமும் நான்கு சாமப் பூசைகளும் செய்து சிவராத்திரி புராணமும் படித்து மறுநாள் உதயத்தின் பின அன்ன தானம் செய்தல், சைவசமய வளர்ச்சி சிதம்பரசித்தி விநாயகர் ஆலயத் திருப்பணிகள் செய்தல், ஸ்ரீ புண்ணியகாச்சி தருமத்திற்கு உதவிடளித்தல், ஆநியனவறறை நோக்கமாகக் கொண்ட இச்சபை கீழ்வரும் விஷயங்களை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய ஒழுங்குகளைச் செய்து தரும்படி யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையைக் கேட்டல்,

சிதம்பரசித்தி விநாயகர் ஆலய திருவாசகங்களைச் சைவபரிபாலன சபை மேற்பார்வையில் இச்சபை நடத்துதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்தல்,

இப்பகுதியில் உள்ள ஸ்ரீபுண்ணியகாச்சி தரும ஆதனங்களின் வருவாயை இச்சபை மூலம் பெற்றுக்கொள்ளுதல்,

ஸ்ரீ புண்ணியகாச்சி தரும திருவாசகசபையில் இச்சபையின இருப்பிரதிநிதிகள் அங்கம் வகிக்க இடம் அளித்தல் ஆகிய விஷயங்கள் சபையின தீர்மானங்களாய் ஏகமனதுடன் நிறைவேற்றப்பெற்றன.

## புன்புலால்யாக்கைக்குப்புலாலூண் வேண்டுமா?

### ஞானப்பிரகாச முனிவரை ஞாபகப்படுத்துங்கள்!

இன்பத் திளையூடுவாழ எவரும விரும்புவர். உடல் வேறுபட்டால் உயிர் உள்ளவை வருந்தும். வருத்தம் பொறுக்காத மக்கள் கருணைக்கடலில் மூழ்கவேண்டாமா? புன்புலால் யாக்கைக்கு இடும் பொருள் இழிந்ததாகவா இருக்கவேண்டும்? பகுத்தறிவுப் பெரியோர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே பாவ புண்ணிய விளைவு காடினர். இக்காலமெல்லாம் ஒன்றுதான். சிறுபவை பெரியவைக்கு இரையாவதுதான் கண்டபலன். வாயற்ற பறவைகளை வருத்துவது என்ன கருணையோ அறியோம்! நல்லூர் ஆம்பெருமானார் கிரதிய உறசவம் கொண்டால் ஒருவாறு காவிற முறையலாம். ஆ! விளக்கைச் சிலேத்திக் கிணற்றுள் வீழ்ப் பிலேசி செயல்போல் அறிவுப் பெருவெளிச்சம் இருக்கக் கருணையின்றி உயிரினீங்கிய ஊனை விலாப்புடைக்க நிறைப்பது மதியீனமே! மக்களுடலினின்று உயிர் மறைந்தால் சுடுகாட்டில் அந்த உடல் தகனஞ்செய்யப்படும். மிருகங்கள் பறவைகளின் உடலின் தகனத்துக்குச் சுடுகாடு சீவஇரக்கமற்ற மனிதரின் வயிறுகளே! ஐயகோ!

### உடுவில் தமிழ்ப்புலவர்
### வ. மு. இரத்தினேசுவர ஐயர்

அம்மா னைவலந் ஆருயிரைக்
கொன்றருந்தி

திருக்கண்ணார்
அம்மாவெவஞ்சொற்கேட்
டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமெனில புகுத
செப்புவதே [தவர்க்கென்
என்பதைக் கேட்டுச் சிந்திப்பவர்களிங்கில்லையா?

கொல்லான் புலாலை
மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்.
— திருவள்ளுவர்

திருவள்ளுவர் தனிப்பெருந் தமிழ்மகன்; தண்ணளிச் சாகரம்; முன் மொழி தமிழின் முதற் பாவலர் எனது ஏற்றவாறு பேச்சில் பிரசங்கிப்பது தான் வெட்கம்! ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. சங்கங்களும் சமரசனர்களும புன்புலாலை மறந்துவிடுங்கள்! ஞானப்பிரகாச முனிவருக்கு நினைவு மண்டபமும் தோன்றுகின்றது. அவரின் அரிய சீவகருணை யாழ்ப்பாணத் தமிழன்பர்களுக்கு நன்கு தெரியுமே.

இந்தியாவில் கருவூரில் (முசுகுந்தனூண்ட) பேரூரில் 300 400 என்ற தொகையில் மக்கள் புலாலுணவை வெறுத்து அந்த

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கர வருஷ மாசி மீ கஉ வெள்ளிக்கிழமை

## கமக்காரரின் மின்சாரக் கனவு!

காங்கேசன் துறையிற் சீமெந்துத் தொழிற்சாலை நிறுவப்பெற்றதும் அங்கிருந்து மின்சார சக்தி யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு எங்கணுமே உபயோகிக்கப்படக் கூடியதாக ஒழுங்குகள் செய்யப்படும் என்று காரியந்தெரிந்தவர்கள் சொல்லக் கமக்காரர்களும் குடியானவர்களும் நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆண்டுகள் செல்லச் செல்ல இந்த நம்பிக்கை நனவாகாத கனவேயென்ற எண்ணம் உண்டாகின்றது.

மின்சாரம் போதியளவு உற்பத்தி செய்யப்படவில்லையா என்றால் அப்படியுமல்ல. என்ன காரணத்தினால் ஊரவர்களுக்கு உபயோகத்துக்கு உதவப்படவில்லை என்று ஆராய்ந்து பார்த்தால் அரசாங்கப் பகுதியார் ஒருவருக்கொருவர் ஆணவங்காட்டி நிற்கின்றமையே.

மின்சாரப் பகுதிக்கு மந்திரியார் ஒருவர் உண்டு. மின்சாரங்கொண்டு செல்லப்படும் வீதிகள் இன்னொரு மந்திரியார் பொறுப்பில் உண்டு. காங்கேசன்துறைத் தொழிற்சாலை வேறொரு மந்திரியிடம். ஐக்கிய இயக்கப் பகுதி பிறிதொரு மந்திரியாரின் பாதுகாப்பிலிருக்கிறது. கிராமச் சங்கங்கள் மற்றைய மந்திரியார் ஒருவர் ஆதிக்கத்தில் நடைபெறுகின்றன. இவர்களில் யார் இதன் பொறுப்புக்குரியவர்? எவ்வளவு பொறுப்புடையவர்? மற்றையவர்களின் பொறுப்பென்ன? அல்லாது கதம்பமாக எல்லாரும் தனித்தும் ஒருமித்தும் இப்பொறுப்பை எடுத்துக் கொள்வதா? என்ற இன்னோரன்ன வேடிக்கையான வாதாட்டங்களில் அரசாங்கம் நேரத்தைச் செலவு செய்துவிடுகின்றதே!

கிராமச் சங்கங்கள் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள் என்றால் அவர்கள் மனப்பூர்வமாக ஆயத்தமாக இருக்கிறார்கள். அவாவிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்க ஒரு தடை உடனேயே வந்துவிடுகிறது. பண நிலை போதியதா? என்றால் எந்தக் கிராமச் சங்கம் இப்பெரிய பொறுப்பை எடுத்து நடத்தும் பணம் படைத்ததாக இருக்கும்? மத்திய அரசாங்கத்திடம் கடன் அல்லது சகாயப் பணம் பெறலாமென்றால் அதற்கோர் ஆயிரம் விபரீத விளக்க வினாக்களுக்கு விடை கொடுத்தாக வேண்டும். கொடுக்க மனமில்லாத கொடையாளியின் நிலைமையில் அரசாங்கம் இருந்துகொண்டு பேச்சிற் பிடி கொடாது வாய் வேதாந்தம் சொல்லிக் குடியானவர்களுக்கு ஏமாற்றக் கதைகள் கூறுவது சனநாயக முறையல்ல என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகின்றோம்.

மந்திரிமார்களும் பிரதிநிதிகளும் சொன்ன சொற்களை நிறைவேற்றுங்காலம் வந்துவிட்டதென்பதை மறந்து விடக்கூடாது. மாயக் குதிரையா பாயுங் குதிரையா என்று பார்க்குங்காலம் அணுகிவிட்டது. கமக்காரருக்காகக் கண்ணீர் வடிப்பது கவலையினாலா கபட நாடக முறையாலா என்று ஆராயும் நேரம் நெருங்கி விட்டது. ஏழைக் கமக்காரன் என்ற சொல்லை நாளொன்றுக்கு எண்ணுக் கணக்கில்லாத முறை சொல்லித்திரியும் தலைவர்கள் தங்கள் தலையைத் தடவிப் பார்க்கும் வேளை சமீபித்து விட்டது. சந்தர்ப்பத்தை முற்றாய் நழுவவிடாது மந்திரிமார்களும் பிரதிநிதிகளும் காலந்தாழ்த்தாது கமக்காரர்களுக்கு மின்சாரத்தைக் கமச் செய்கைக்குதவும் பொருட்டு மத்திய அரசாங்கத்திடம் கிராமச் சங்கங்களுக்கு வேண்டிய பணம் சகாயமாகக்கொடுப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்வார்கள் என்று எண்ணுகின்றோம்.

தொடர்கதை

# இன்பத்தின் நிலை இதுதானு?

'இறை ஒளி'

11

காதற் கலக்கத்தில் வகையறியாத பங்கஜம் மேலுங் கூறுவாள். படித்த தன் வண்ணமாகும் மனம் இதுவரை படித்ததிலிருந்து மாறப்போவதாயில்லை. பேதைமையின் உருவான பெண்ணென்றாலும் பாதொரு எண்ணங் கொண்டேனே அதனை மாற்றப்போவதில்லை. நான் மூக்கறுகின்ற வாழ் சூழ்ந்து வருகின்றதை நான் நன்கறிவேன். பகிரங்கமாக நாம் இருவரும் எங்களை மறந்து காதலன் காதலி என்ற முறையை ஆக்கி விட்டோம். கல்லூரியிலுள்ள மாணவிகள் எல்லாரும் அறிந்துவிட்டனர். இனி ஒரு கணமும் கல்லூரியிலிருந்து இசைநற்க என் மனம் ஏவாது. ஆனால் நான் ஒன்று மட்டும் நிச்சயமாக உறுதி சொல்வேன். அந்நேரம் அறியாமலோ உங்களை நாயகன் என்று நடிப்புக்காக எண்ணினது மாத்திரமன்று உள்ளபடி எண்ணும் உணர்ச்சியைப் பெற்று விட்டேன் இக்கிலை பிறழேன்—எனினும் என் தந்தையார் என் மன உண்மையை அறிந்தாலும் அதை நிறைவேற்ற விடவே மாட்டார். துலாசார முறை தவறாதவர் தந்தை. நீர் ஆராய்ந்தொழிய உடம்பட மாட்டார். இனித் தாமதம் கூடாது. மோட்டார் இரதம் வர நேரமாகிவிட்டது. என்னிடம் அறிய வேண்டியவற்றைக் காகித மூலம் அறிந்து கொள்ளலாம் என்று சொல்லி முடியுமுன்னர் சங்கரர் மோட்டார் இரதத்தில் வந்தார். காலந் தாழ்த்தமையால் உடனே பங்கஜம் இரதத்தில் ஏறிக் கொண்டு போய் விட்டாள்.

### கூவி மதி!

சங்கரர் வீட்டு வாயிலருகே மோட்டார் இரதம் செல்லும் பொழுது ஓர் இளம் பெண் அங்கேயுள்ள இன்னொரு பெண்ணைப் பங்கஜம் வீடு எங்கே' என்று வினவுவதைக் கேட்ட பங்கஜம் பகவதி நிற்பதைக் கண்டு பதைபதைத்தாள். அதற்கிடையில இரதம் வாயிலுட் சென்றது. பங்கஜம் இறங்கியதும் சங்கரர் பணியாளை அழைக்க இரதத்தை எடுத்துச்சென்று விட்டார். நெஞ்சு தஞ்சங்கெட்டும் கல்யபறிவேன்ற தணையக்கொண்டு பங்கஜம் தன் மனதைத்தேற்றி மெல்ல வாயிலருகே வந்து பகவதியைப் பார்த்தாள். அடுத்த வீட்டு வாயிலருகே நிற்கும் பகவதியைக் கண்டாள். உடனே அவளருகே சென்று கையிற் பிடித்தபடி "எங்கே வந்தாய்! வா எங்கள் வீட்டுக்கு. தேநீர் அருந்திச் செல" என்று மிகவு மன்பாக அழைத்தாள். பகவதி தனியே சங்கரரைக்கண்டு பங்கஜத்தின் காதல் நாடகத்தைப்பற்றிச் சொல்ல எண்ணி வந்தவள், பங்கஜத்தைக் கண்டதும் யோசனையை மாற்றி விட்டாள். இந்த வீதியில் எங்கள் அத்தை மகள் இருக்கிறாள். அவளைப் பார்க்க வந்தேன், அப்போது நீயும் இங்கே இருப்பதென்று அறிந்தேன். உன்வீடு எது என்று கேட்டுக்கொண்டிருக்கும் போது நீயும் வந்துவிட்டாய். நேரமாகிறது நான் இன்னும் ஒருமுறை வருகிறேன் என்றாள் பகவதி. அதுமுடியுமாளவிட்டருகே வந்த என் மாணவி சின்னகிதியை யான் உபசரிக்காது விடுவதா என்று சொல்லி பகவதியை யழைத்துச் சென்றாள் பங்கஜம். அழைத்துச் செல்லும்பொழுது நாடகம் நல்லாய் வருகிறதா பகவதி என்றாள் பங்கஜம்; நலலாயில்லாவிட்டால் நீயெவ்வளவு பாடுபடுவாயா? எப்படியும் நாடகம் நலலாயிருந்தால் எங்கள் கல்லூரிக்குத் தானே நல்லது என்ற பகவதி பதில் சொல்லிக்கொண்டு 'பங்கஜம்!' கதாநாயகியாக நாங்கள் இருவரும் நடித்தால் என்ன? ஆசிரியரிடம சொல்லமாட்டாயா, என்றாள். நீயே கதாநாயகியாய் நடிக்கலாமே.... நான் அப்படி நடிக்க விரும்பிக் கேட்கவில்லையே! ஆசிரியர்தான் என்னைத் தெரிந்தார் என்றாள் பங்கஜம். அது மெய். அவர் உன்னைத் தெரிந்ததான தெரிந்தார். நீ என்னைத் தெரிந்துவிட்டால் நாடகம் நல்ல ஒழுங்காகிவிடும் என்று பகவதி பதில் சொன்னாள்.

### மாய உபாயம்!

அப்பொழுதுதான் பங்கஜம் பகவதியை நோக்கி 'அப்படியானால் இன்று ஒழுங்குபார்ப்பதை என்றான் இடையூறு செய்தாய் எங்கள் நடிப்புத்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## கோணேசர் ஆலயத் திருப்பணி

### நிதிவரவுக் கணக்கு

கோணேசர் ஆலயத் திருப்பணி நிதிக்கு இற்றைவரை வந்த முழுத்தொகை ரூபா 31246-90 எனவும் தனித்தனி உதவிய தொகைகளுள் யாழ்ப்பாண சைவபரிபாலன சபை உதவிய ரூபா 7790-28 மற்றெல்லாவற்றிலும் கூடியதென்றும் Dr. W. பாலேந்திரா அவர்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்று அறிவித் தருகின்றது.

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 2—3—52——8—3—52

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் காத்திராத புதுச செலவுகளுக்கிடமுண்டு. நடுவாரத்தில குடும்பத் தொந்தரவுகளுக்கும் சண்டைகளுக்குமிடமுண்டு. புதிய முயற்சிகள் விரும்பிய நன்மையைத் தரும். ஆனால் அதிக முயற்சி செய்ய வேண்டும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

வீட்டு விஷயங்கள் உத்தியோக விஷயங்களில் மிகுந்த நன்மைக்கிடமுள்ள வாரம். நல்லாயினபமனுபவிக்கலாம். தசபுத்தியும் நலலாயிருந்தால் சூது பந்தயம் முதலியவற்றால் லாபமடையக்கூடும.

**மிதுனராசி மிருகசீரிடம, 3 4, திருவாதிரை, புனர்பூசம 1,2,3.**

பணத்துறையில் நல்ல காலம். பெண்ணின நண்பர்களும் அதிக உதவி செய்வர். கவனமாய்த் தருணத்திற் கேற்ப நடந்தால் முயற்சியில் அதிகஞ் சித்தி பெறலாம்.

**கடகராசி புனர்பூசம் 4 மபாதம பூசம் ஆயிலியம்.**

இந்த வாரம் கூடவேலை செய்பவர்கள், தொடர்புள்ளவர்களுடன் பிணக்குகள் ஏழாமற கவனமாயிருக்கவும். தேகசுகம் இன்னும் தொந்தரவானதாய்த்தானிருக்கும். கவனமாயிரா விட்டால் பெருங்கெடுதி நிகழக்கூடும.

**சிங்கராசி மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.**

இந்த வாரம் குடும்பச் சண்டைகளும் மனச் சலனமும் உண்டாக இடமுண்டு. வரவுக்குத் தக்க செலவுசெய்து சமாளிக்க முடியாமலிருக்கும். வியாபார முயற்சிகள் கவனமாகக் கையாளப்பட வேண்டும். எழுத்திற் பிடிகொடுக்க வேண்டாம்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம பாதம அத்தம சித்திரை 1, 2ம பாதம்.**

வாரத்தின் முதல நாள் கவனமாகக் கழிக்க வேண்டும். உத்தியோகத் தொந்தரவுக்கும் சுகவீனத்துக்குமிடமுண்டு. வார மிகுதி புது முயற்சிகளுக்கு நன்று.

**துலாம் சித்திரை 3,4ம் பாதம சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம**

இந்த வாரம் அதிவிரைவாய் ஒன்றுஞ் செய்ய வேண்டாம். புது வியாபாரத் துறைகளில் ஈடுபடும் பொழுது கவனமாய் ஆலோசிக்க வேண்டும் ஞாயிறு இரவு, திங்கள் செவ்வாய் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**விருச்சிகராசி விசாகம் 4 - ம் பாதம அநுஷம், கேட்டை.**

புதன் வியாழன் புறநீங்கலாக இந்த வாரம் நல்ல புதினங்களைத் தரும். களியாடிக்கொண்டிருக்கும் பொழுது பிரயோசனமுள்ள தொடர்புகள் உண்டாகும். வார இறுதியில் இனத்த முதியோர் கோபத்தையும் மனச் சலனத்தையு மூண்டாக்க கூடும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம.**

வியாழன் வரையும் புது முயற்சிகளுக்கு நல்ல காலம். சொந்த முயற்சியாலாகவேண்டிய எதையும் தொடங்குக. நண்பருதவி நிச்சயம். வாரத்தின் இறுதி இரண்டு நாட்களும் கவனமாய்க் கழிக்க வேண்டும.

**மகரராசி உத்தராடம் 2,3, 4ம் பாதம திருவோணம அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் சண்டைகள் விரைந்து தொடரவரும். என்ன தீர்மானமும் செய்வதற்கு முன நம்பிக்கையான நண்பர் அல்லது சக தொழிலாளருடைய மதிமொழியிலேயே தங்கும்படி வற்புறுத்திப் புத்திமதி கூறுகின்றேன். தேவையில்லாமல் தொடக்குற்றுக்கொள்ள வேண்டாம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம.**

தேகசுகம மனச்சலனத்தைத் தரக்கூடும். ஆனல் பணவரவுத்திடம் தெளிவாயிருக்கு. வார இறுதியில் நண்பர் அதிக உதவி செய்வர்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இந்த வாரம் தேவையான அளவுக்கு உதவியும் உற்சாகமும் தரப்படும். திட்டங்களை முன்னேற்றுக. வார இறுதியில் தாங்கமுடியாத செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தித் திரட்டு
=O=

மாத்தறையில் தாழ்த்த வகுப்புகளுள் ஒன்றான "ராடே தி" சாதிப் பையன்களுடைய மேலங்கிகள் மற்றொரு சாதியாரால் கிழிக்கப்பட்டனவென்றும் பொலிசார் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தனரென்றும் தெரிகிறது.

X X X

ஆயுள்வேதத்தை அகற்ற வழிகாண முடியாதாவென்று பிரதம மந்திரி தம்மைப் பலமுறை கேட்டார் என்கிருர் திரு. பண்டாரநாயக. இக்கூற்று முழுவதும் பிழையென்கிருர் திரு. சேனநாயக.

X X X

வத்தளை வாசியாகிய திரு M. P. ஜயசிங்க என்பவர் தமது மோட்டார் வண்டியைச் சட்ட விரோதமாக ரோட்டில் விட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட பொழுது தமக்கு அச் சட்டம் தெரியாதென்று நீதிபதிக்குச் சொன்னார். ஒரு கிழமைக்கு ஒவ்வொரு நாளும் மாலை 4 மணிக்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தருடன் பட்டினம் முழுவதும் சுற்றிப் பார்த்து ரோட்டுச் சட்டம் படிக்க வேண்டுமென்றும் அப்படிப் படிக்கத் தவறினால், சட்டத்தின்படி தண்டனைக்காளாவரென்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

X X X

தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ்ச் சர்வகலாசாலையும் சிங்களப் பிள்ளைகளுக்குச் சிங்களச் சர்வகலாசாலையும் அமைக்கவேண்டுமென்று சேர் ஐவர் ஜென்னிங்ஸ் புத்திமதி கூறியுள்ளாராம். பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் தமிழ்த் தலைவர்களுக்கு இது தலையிடியுண்டாக்கப் போகின்றதே! என்ன பரிதாபம். "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்"

X X X

எதிரிகளை நசுக்கக் கூடிய எல்லா ஆயுதங்களும் தங்களிடமிருக்கின்றது ருஷிய தலைவர்கள் கூற்று.

X X X

மக்களின் ஒற்றுமையைக் காட்டுவதற்கு முஸ்லிம்கள் யாவருக்கும் பாஷை ஒன்றாயிருத்தல் வேண்டும். இந்த விசேஷமான விஷயத்தைப் பராமுகமாய் விடக்கூடாதெனத் திரு. A. M. A. அசீஸ் அவர்கள் அகில இலங்கை முஸ்லிம் கழகத்தில் வற்புறுத்திக் கூறினார்.

## தினவரவு இடாப்பு

பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் பலர் பிரேரித்தபடி எங்கள் தினசரி இடாப்புக்கள் உயர்ந்த காகிதத்திற் சிறந்த முறையில் அச்சிட்டு அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

விலை ஒன்றரை ரூபா.

மனேஜர்
சைவப்பிரகாச யந்திரசாலை
யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ நாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலை

1-ம் பக்கத்தொடர்ச்சி

முப்பது நாற்பது ரூபா கொடுத்து வந்தேன்.

இப்போது இக்காவிய பாடசாலையிற் கற்போர் தொகை 5. மற்றைப் பிள்ளைகள் தொகை 137. இவருள் பெண்கள் 33 பேர். உபாத்தியாயர்கள் காவிய பாடசாலைக்கு ஸ்ரீ அ. குமாரசுவாமிப் புலவரவர்கள், மற்றைய உபாத்தியாயர்கள் நால்வர். தையல் வேலை பயிற்றுபவர் ஒருவர். இந்த ஐவருள் முதலுபாத்தியாயர் இங்கே காவியபாடசாலையிற் கற்றுப் பின் Training College இலும் கற்றுத் தேறிய ஸ்ரீ பஞ்சாட்சர ஐயரென்பவர்.

இப்பொழுதுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடங்களெல்லாம் எழுத வாசிக்கப் பழகுகிற சாமானிய பள்ளிக்கூடங்களாக விருக்கின்றனவேயன்றி விசேஷமாகச் சமய நூல்கள் படிப்பிப்பனவாயில்லையே. ஆறுமுகநாவலருடைய சைவப்பிரகாச வித்தியாசாலையும் இப்படியிருப்பதாவென்று நினைத்து, அதில் எல்லாச் சமய நூல்களையும் விசேடமாகச் சைவ சித்தாந்தத்தையும் படிப்பிக்க விரும்பி அது படிக்க விரும்பும் இரண்டு மூன்று பிள்ளைகளுடைய போசனச் செலவுக்காக மாசம் ரூபா 22/= வாடகை தரும் ரூ 6000 பெறுமதியுள்ள ஒரு கிட்டங்கியை, என்னுடைய சிவபதமடைந்த மகள் மீனாக்ஷியம்மைபெயரால தருமசாதனஞ் செய்தேன்.

[மேற்காட்டிய ஆதனத்தின் வருமபடியிலிருந்து மேற்படி வித்தியாசாலையில் பழைய தமிழ்க் காவியங்களும் சமய சாத்திரங்களும் படிக்கும் நாலுபிள்ளைகளுக்கு எனது சிவபதமடைந்த மகள் மீனாட்சி அம்மை பெயரால் அன்ன வஸ்திரம் கொடுத்து வரவேண்டியது எனனும்நிபந்தனையோடு]

பிள்ளைகளுக்கு அன்னங் கொடுத்துப் படிப்பிக்கலாமென்று பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்தும் பிள்ளைகள் சேரவில்லை.

இவ்வித்தியாசாலை வரும்படியில் உபாத்தியாயர் வேதனம், மடத்து நித்திய பூசை குருபூசை முதலிய செலவுகள் நீக்கி மிச்சத்தில் முல்லைத்தீவிலுள்ள ஒரு வித்தியாசாலைக்கு ஒரு தொகைப் பணங் கொடுத்து வருகிறேன் கீரிமலையிலுள்ள வித்தியாசாலையும் நன்றாக வரவில்லை. கோப்பாயிலுள்ள வித்தியாசாலை ஒருவாறு நடந்து வருகின்றது. இவ் வித்தியாசாலைக்குரிய கடைகளெல்லாம் மிகப் பழுதாயிருந்தமையால் அவைகள் சென்ற வருடத்தில பிரித்துக்கட்டி நிறைவேறிவிட்டன.

ஸ்ரீமத் சதாசிவப்பிள்ளையவர்கள், எனக்கெழுதிய அதிகாரப்பத்திரத்தில் இவ்வித்தியாசாலை என்றென்றைக்கும் நடக்கவேண்டிய ஒழுங்குகளாகிய விதானங்களை என்னையே செய்து வைக்கும்படி எழுதியிருக்கிறார்கள், அவ்விதானத்தை இவ்வித்தியாசாலையைத் தாபிக்கும்படி ஆதன் தாபகருடைய உள்ளத்தினின்று ஊக்கிய ஈசரனே செய்ய வேண்டியவரன்றி நான் செய்யத் தகுந்தவனல்லன். ஆயினும் உலக ஒப்பனைக்காக ஒன்று வேண்டுமென்றுகருதி ஒரு பத்திரம் எழுதியிருக்கின்றன.

நல்ல முறையாக இவ்வித்தியாசாலையை நடத்தியாறு உண்ணின்று ஏவும் பொருட்டு, உயிர்தொறும் மேவி நிற்கும் அவனைப் பிரார்த்தித்து எனக்கு உபகாரிகளாயிருக்க அனைவாக்கும் நன்றி சொல்லுகின்றேன்.

---

கோயிற் குருக்கள்மார் ஆலயத் திட்டத்தை இப்பொழுது வரவேற்கின்றனர். அத்துடன் தங்கள சம்பளத் திட்டம் வேண்டுமென்பது இப்போ அவர்கள் விருப்பம்.

## இன்பத்தின் நிலை இதுதானா?

2-ம் பக்கத் தொடர்ச்சி

கிறமையாய் வரும் வேளையில் ஏதோ விகடமாய்ச் சொல்லியதை தேடிவிட்டாயே ஆசிரியர் கல்லூரியை இரண்டு வாரத்திற்கு மூடிவிட்டார். நானும் இனி இக்கல்லூரிக்குத் திரும்பி வரமாட்டேன்' என்று கூறி முடித்தான்,

பகவதி சூழ்ச்சி நிறைந்தவளாயிருப்பதை அறியாத பங்கஜம் உள்ளதை உள்ளபடி கூறிவிடக் கோபங்கொண்ட பகவதி சொல்லுவாள்: "வேடிக்கை விளையாட்டுத் தெரியாத சிறுபிள்ளையா? ஏதோ விகடமாகச் சொன்னேன் அதற்காக இந்தத் தீர்மானம். நாளைக்கு நானும் வருகிறேன். போவோம் கல்லூரிக்கு. ஆசிரியரைக் கண்டு நாடகத்தை மறுபடியும் பழக ஏற்பாடு செய்யலாம். என்று வஞ்சனையாகச் சொல்லப் பங்கஜமும் இசைந்தாள். பகவதி தேநீர் அருந்திவிட்டு விடு திரும்பினள். ... .... .... .... .... .... ....

(தொடரும்.)

**உழைப்பதற்கு வழி!**

மாதம் ரூபா 100 தொடக்கம் 300 வரையில் மூலதனமின்றி ஓய்வு நேரங்களில் உழைக்க ஒரு வழியுண்டு. இதுபற்றிய விபரங்களை இவ்விலாசத்திற் கெழுதி அறிக. விபரங்கள் இலவசம்.

**Girson Knitting Works**
**Ludhiana 9**

யாழ்ப்பாண சிரேஷ்ட நீதிமன்றத்திற்கு 15 வழக்குகள் வந்திருக்கின்றன அவற்றுள் ஒன்பதும் கொலைவழக்குகள். எங்கள் அன்பு வளர்ச்சிக்கு அறிகுறிபோலும்.

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

### மதமாற்றம் — — அல்லவாம்!

22–2–52 ல் பிரசுரமான உங்கள பத்திரிகையில் திரு. யே. க. பொன்னையா அவர்கள் "மதமாற்றமல்ல!" என்ற தலைப் பெயருடன் எழுதிய கடிதத்தைப் படித்தேன. அவர் உண்மையைப் பொது மக்களுக்கு விளக்க முன் வந்தமைக்காகச் சைவ மக்களாகிய நாங்கள அவருக்கு நன்றி கூறவேண்டும். சில சைவாபிமானிகள கூறிய செய்திகளைக்கொண்டே 15-2-52ல் உங்கள் பத்திரிகையில் வெளிவந்த எமது கடிதம் எழுதப்பெற்றது. எமது கடிதத்தில எழுதப்பட்ட 'மதமாற்ற' விஷயம் சம்பந்தமான சந்தேக நிவிர்த்தியின் பொருட்டு நண்பர் திரு. யே. க. பொன்னையா அவர்களிடம் சில ஐயங்களை அன்பாகக்கேட்க விரும்புகின்றேன்.

(1) இவ்வருடம் நல்லூர் கிறீஸ்தவ ஐக்கிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் தொகை யென்ன?

(2) தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுள் எத்தனை பேர் கிறீஸ்தவ மதாசாரப்படி சிறுவயதில் ஞானஸ்நானம் பெற்றவர்கள்?

(3) எத்தனைபேர் டிரெயினிங் கல்லூரியிற் சேர முன்பாக 1951 ல் அல்லது 1952 ல் ஞானஸ்நானம் பெற்றவர்கள்?

பொதுமக்கள் உண்மையை அறிதற்குத் துணையாக நண்பர் திரு. பொன்னையா அவர்கள் இவ் வினாக்களுக்கு உங்கள் பத்திரிகைவாயிலாக அன்பான பதில் கூறுவாராக.

இங்ஙனம்
மு. மயில்வாகனம்.

## பெனின்சுலர் ஏஜென்சீஸ் லிமிடெட்

'பெனின்சுலர் ஏஜென்சீஸ்' என்ற பெயர்கொண்ட வியாபார நிலைய காரிய கர்த்தாக்கள் சபைத்தலைவர் பின் கூறப்படுவனவற்றை வாங்க விரும்புவோரின் கேள்விப்பத்திரங்களை (Tender) 1952-ம் ஆண்டு பங்குனி மாதம் 8-ந் திகதி வெள்ளிக்கிழமை 5 மணிக்கு முன் ஏற்றுக்கொள்வார்.

**விற்பனைக்குரியவை:** யாழ்ப்பாணம் காங்கேசன் துறை ரோட்டில் 71-ம் இலக்கத்திலுள்ள மேற்படி வியாபார நிலைய யாழ்ப்பாண கிளைஸ்தாபனத்துக்குரிய வியாபாரப் பொருட்கள், தளபாடங்கள், கட்டடமா யமைக்கப்பட்டவைகள, உபகரணங்கள் உரிய பொருள்கள்.

கேள்விப்பத்திரம் அனுப்புமிடம்:

N. செல்லமுத்து அவர்கள்
பெனின்சுலர் ஏஜென்சீஸ் லிமிடெட் தலைவர்
121-ம் இலக்கம், 2-ம் குறுக்குத்தெரு
புறக்கோட்டை கொழும்பு 11

## பாடசாலை ஆரம்பம்

கழிந்த நாளு மாசி மீ கஉ (13-2-52) புதன் கிழமை பகல் 2 மணியளவில் வேலணை வடக்கு பள்ளம்புலம் சோளாவத்தையில் சைவவித்தியாவிருத்திச்சங்கம் புதிதாக ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்துள்ளது. வேலணைக் கிராமச்சங்கப் பழைய தலைவரும் சரவணை 'நாகேஸ்வரி' வித்தியாசாலைத் தலைமை ஆசிரியரும் ஆகிய திரு இ. மருதையனார் அவர்கள் புதிய பாடசாலையைத் திறந்து நாட்படிப்பை ஆரம்பித்து வைத்தார்கள்.

அன்று பகல் 3 மணிக்குச் சைவ வித்தியாவிருத்திச்சங்க முகாமையாளர் ஸ்ரீமான் சு. இராசரத்தினம் அவர்கள் நூற்றுக்கணக்கான சைவமக்கள் முன்னிலையில் மங்களவாத்திய மொலிக்கச் சகல ஆசாரங்களோடும் பாடசாலையின் சிரந்தரக் கட்டடத்திற்கு அத்திவாரக் கல் நாட்டினார்கள். இதன் பின் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஸ்ரீமான் சு. இராசரத்தினமவர்கள் தலைமைதாங்கினார்கள். ஸ்ரீமான் இ. மருதையனார் அவர்கள் தமது வரவேற்புரையில் தலைவர் அவர்கள் சைவசமயத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் தொண்டினைப் பாராட்டிவிட்டுப் புதிய பாடசாலையை ஆக்குவதற்கு நெடுங்காலமாகச் செய்துவந்த முயற்சியையும் இப்போது சைவப்பாடசாலையைப் பெற்றிருக்கும் கிராமத்தவரின் அதிர்ஷ்டத்தையும் சபையோர்க்கு விளக்கிப் பேசினார்கள். மதப் பாடசாலைகளின் அவசியத்தைப்பற்றித் தலைவரவர்கள் நன்கு விளக்கிக் காட்டினார். திருவாளர்கள் S R. பொன்னையா, பண்டிதர் அ. பொன்னுத்துரை, V. சேதுகாவலர், N. நடராசா, சி. சதாசிவப்பிள்ளை அவர்களும் பேசினார்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### பிழை திருத்தம்

1952-ம் ஆண்டு மாசி மாதம் 12-ம் திகதி வெளிவந்த இந்துசாதனத்தில் 4-ம் பக்கத்தில் 3-ம் கலத்தில் மு. கா. மார்க்கண்டு கம்மிஷனரின் கோட்டு விற்பனவு விளம்பரத்தில் விற்பனவு: 1952-ம் ஆண்டு பங்குனி மாதம் 5-ம் திகதி சனிக்கிழமை என்றிருப்பதை 1952-ம் ஆண்டு பங்குனி 5-ம் திகதி புதன்கிழமை என்று வாசிக்கவும். ப—ர்.

## அறிவித்தல்

### இலங்கைப் பிரசாவுரிமை

1950-ம் ஆண்டின் 40-ம் இலக்கப் பிரசா உரிமைத் திருத்தச் சட்டத்தாற்திருத்தப்பட்ட 1948ம் ஆண்டின் 18-ம இலக்க இலங்கைப் பிரசா உரிமைச் சட்டத்தின் 19-ம் பிரிவின் பிரகாரம், இன்னொரு நாட்டின் பிரசைகளாக விருக்கும் இலங்கை வம்சாவழிப்பிரசைகள், 1952 ம் ஆண்டு மார்கழி மீ (டிசம்பர்) 31 ந் திகதிக்கு முன்னர், அல்லது அவர்கள் பிராயமற்றவர்களாயின் இருபத்திரண்டு (22) வயதாகமுன்னர் தகைள மற்றைய பிரசாவுரிமையைத் துறந்தாலன்றி, இலங்கைப் பிரசைகளாக விருக்கும் அந்தஸ்தை இழப்பர்.

2. 1952 ம் ஆண்டு மாசி மீ (பெப்பிரவரி) 29 ம் திகதி 'கசெற' பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அறிவித்தலை வேறு விபரங்களுக்குப் பார்க்கவும்.

க. வைத்தியநாதன்
நிரந்தரக்காரியதரிசி
பாதுகாப்பு வெளிநாட்டு
விவகார மந்திரிகாரியாலயம்.

கொழும்பு 1.
1952, ஆண்டு மாசி மீ (பெப்ரவரி)
G. 62 29—2—52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

### ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்பு

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை மண்டபத்தில் மேறபடி வகுப்பு. கர வருடம் மாசி மீ 18-ம் தேதி (1-3-52) சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி (31-5-52) வரையும் நடைபெறும்.

வகுப்பிற் சேர விரும்புவோர் வகுப்புக் காலம் முழுவதற்கும் உரிய வேதனப் பணம் முப்பது ரூபாவையும் முற்பணமாகச் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். விடுதியிற் சேர விரும்புவோர் மாசம் இருபத்தைந்து ரூபா வீதம் செலுத்தவேண்டும்.

சைவ ஆசிரியகலாசாலை,
திருநெல்வேலி,
21-2-52.

இங்ஙனம்
சோ. நடராசா



## சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் சூலைரோகம், இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சர்வவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேசபுஷ்டி, வஜ்ரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்களை அதிசமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் நீர்த்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

### சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல் பல்லைப் பூச்சி அரிந்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

போட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-53. கோட்டைமுனை, மட்டக்களப்பு.


## புன் புலால் யாக்கைக்குப் புலாலூண்வேண்டுமா!

1-ம் பக்கத் தொடர்ச்சி

சைவப் பெருநெறியை கடைப்பிடித்தனர். பசுவும், ஆடும் பிறவும் மக்களுக்கு உபகாரிகளே! பசுக்காத்தலின் பண்பை ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் 4-ம் பாலபாட புத்தகத்தில் பாருங்கள். பிறவும் நாம் உணர அப்பெரியார் வசனம் வழிகாட்டும்.

ஆகவே, தூயமனம், தூய செயல், தூய வாக்குகளால் உயிருக்கு உறுதி தேடவேண்டியதே மக்கள் கடமையாகும். வஞ்சகப் பொக்கிஷம் அழிந்துவிடும். அன்புக் கருவூலம் எடுக்க எடுக்கப் பல்கும். சைவத் திருநெறியீர்! சற்று இரக்குங்குங்கள் விழியுங்கள்!!

## இந்தியா இலங்கை நாடுகளின் நார் ஏற்றுமதி

இந்தியா, இலங்கை ஆகிய இருநாடுகளிலும் பிரதானமாக உற்பத்தியாகும் தென்னை நார்களுக்கு உலகதேவை வலுத்து வருகிற தென்பதைக் காட்டுவதான புள்ளி விவரங்கள் சமீபத்தில் வெளியாகியுள்ள சாமிராச்சிய பொருளாதார சபையின் வருடாந்த அறிக்கையில் கண்டுள்ளன. 1950-ம் வருடம் தென்னை நாருக்காக நாரினால் தயாரிக்கப்பெற்ற சாக்குக்கான உலகதேவை திடீரென உயர்ந்ததென்றும், சென்ற வருடம் இலங்கை ஏற்றுமதி செய்த நாரின் அளவு 1947-ம் வருடத்தைவிட 28 சதவிகிதம் அதிகமென்றும், அதே சமயத்தில் இந்தியா இலங்கையின் நார்ச் சாக்குகளின் ஏற்றுமதியும் அதிகரித்ததென்றும், நார் உற்பத்தி ஏற்றுமதி அளவு யுத்த முற்காலத்தைவிட மிக மிக அதிகமென்றும் அவ்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது. நார், நார்ப்பண்டங்களைப் பிரிட்டனதான் மிகக் கூடுதலாக வாங்குகிறது.


இசைப்பிரியர்களுக்கு ஓர் அருந்தருணம்!

# என்றுங்காணா :: :: இன்னிசை விருந்து

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் (College Quadrangle)

மாசி மீ 25 உ (8-3-52)

சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு நடைபெறும்

தர்மபுர ஆதின இசைப்புலவரும், சங்கீத சாகித்திய சிரோமணியும், பட்டினத்தார், நந்தனர், மாணிக்கவாசகர், திருமழிசை ஆழ்வார் முதலிய படங்களில் கீர்த்திபெற்றவருமாகிய

இசையரசு

M. M. தண்டபாணிதேசிகர் வாய்ப்பாட்டு

: பாங்கான பக்கவாத்தியம் :

| | | |
|---|---|---|
| மதராஸ் | A. கண்ணன் | மிருதங்கம் |
| ,, | T. பாலசுப்பராயலு | வயலின் |
| ,, | C. V. விருசாமி | கெஞ்சிரா |

சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக



திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்

திறமான ஞானிமார்க்ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.


## மகா சிவராத்திரி

தென்கோவை விசபத்தீஸ்வரர் கோவிலில் சென்ற சனிக்கிழமை (23-2-52) மேற்படி தினத்தை முன்னிட்டு மாலை 6 மணி தொடக்கம், சவோத்தரசத சங்காபிஷேகமும், திருவிழாவும் பின் ஸ்ரீமான்கள் மு. வேலாயுதபிள்ளை, பே. தம்பையா ஆகியவர்களால் வாயாரத் தன்னடியே பாடும் தொண்டரினத்தகத்தான், சமயம் என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவுகளும், ஸ்ரீமான்கள் த. நடராசலிங்கம், ஆ. கணபதிப்பிள்ளை, K. V. சாமிகள ஆகியவர்களால் முறையே இளையான்குடி மாறனர், வள்ளி திருமணம், முருகன் பெருமை என்பனவற்றிற் சிறந்த கதாப்பிரசங்கங்களும் செய்யப்பெற்றன. இடையிடையே பக்கவாத்திய கோஷ்டியாரால் சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றது. அநேக அன்பர்கள் பெருமானைத் தரிசித்து நிகழ்ச்சிகளைக் கண்டு கேட்டு இன்புற்றனர். நாலு யாமமும் பூசைகள் நடைபெற்றன. மறுநாள திருக்குளிர்ச்சியும் அன்னதானமும் நிகழ்ந்தன.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

### பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

### தினசரிப்பற்றுவரவு.

எச்சமிந சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

### தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

### உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

### கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகபாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. கிருப்பர்.



இலங்கையின் மிகப்பெரிய —நகை— வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி.
யாழ்ப்பாணம்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday, February 29. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org